# **கள்ளக்குறிச்சி நகராட்சி**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் மன்ற கூட்டம் 2019 பிப்ரவரி மாதம் 20 ஆம் தேதி புதன் கிழமை காலை 11.30 மணிக்கு தனி அலுவலர் அவர்கள் தலைமையில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை:-** **திரு. ம.அருண்,**
**தனி அலுவலர் / ஆணையாளர் (பொ)**

## **கூட்ட பொருள்கள்**

**பொருள் எண்-01**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட சேலம் மெயின்ரோட்டில் கட்டப்பட்டுள்ள குளக்கரை கடைகளுக்கு பின்னால் கட்டப்பட்டு, வாடகைக்கு விடப்படாமல் இருந்த கடை எண்கள். 14, 15, 16, 17, 18, 21, 22 மற்றும் 24 ஆகியவைகளுக்கு 12.02.2019ல் நடைபெற்ற பொது ஏலத்தில் கீழ்க்காணும் விவரப்படி ஏலம் கோரப்பட்டுள்ளது.

| வ. எண் | கடை எண் | கலந்து கொண்டவர்களின் பெயர் மற்றும் முகவரி | வைப்பு தொகை செலுத்தியது | கோரிய ஏலக் கேள்வி | உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி |
|---|---|---|---|---|---|
| 1 | 21 | பரணிதரன்<br>25ஜி, திருவள்ளுவர் தெரு,<br>அண்ணாநகர், கள்ளக்குறிச்சி | 1,00,000 | 13,000 | -- |
| 2 | | வி.விஜயலட்சுமி<br>189-2ம் தளம், கவரை தெரு, கள்ளக்குறிச்சி | 1,00,000 | 13,500 | 13,500 |
| 3 | | ஆர்.பருவதம் க/பெ ராமலிங்கம்<br>நடுத்தெரு, வன்னஞ்சூர், சங்கராபுரம் வட்டம் | 1,00,000 | 13,100 | -- |
| 4 | 22 | வி.சீனுவாசன் த/பெ வெங்கடேசன்<br>129-2ம் தளம், கவரை தெரு, கள்ளக்குறிச்சி | 1,00,000 | 15,500 | 15,500 |
| 5 | | இ.கார்த்திக்<br>12, பள்ளிக்கூடத் தெரு<br>வ.உ.சி. நகர், கள்ளக்குறிச்சி | 1,00,000 | 15,400 | -- |
| 6 | 24 | ரா.பர்வதம் க/பெ ராமலிங்கம்<br>மோ.வன்னஞ்சூர், சங்கராபுரம் வட்டம் | 1,00,000 | 20,000 | 20,000 |
| 7 | | கு.குமரன் த/பெ குப்பன்<br>1/16, பஜனமடத் தெரு<br>மோ.வன்னஞ்சூர், சங்கராபுரம் வட்டம் | 1,00,000 | 18,000 | -- |
| 8 | | ஆர்.கார்த்திக் த/பெ ராஜகோபால்<br>32X1, ஏமப்பேர் வாய்க்கால் மேட்டுத் தெரு,<br>ஏமப்பேர், கள்ளக்குறிச்சி | 1,00,000 | 18,500 | -- |
| 9 | | ஆர்.அம்சா க/பெ கார்த்திக்<br>ஏமப்பேர் வாய்க்கால் மேட்டுத் தெரு<br>ஏமப்பேர், கள்ளக்குறிச்சி | 1,00,000 | ஏலம் கோரவில்லை | |

அலுவலகக் குறிப்பு

1. உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கேட்ட குத்தகைதாரர்களுக்கு கடையினை ஒப்படைக்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. அதற்கான உத்தரவினை வழங்க தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3039/2018/அ1)**

**பொருள் எண்-02**

கள்ளக்குறிச்சி நகராட்சி தனி அலுவலர் அவர்களின் மன்ற தீர்மான எண். 367/2018 நாள். 30.11.2018ன்படி சேலம் நெடுஞ்சாலையில் உள்ள குளக்கரை கடைகள் 26ல் பின்புறமுள்ள கடை எண். 13, 14, 15, 16, 17, 18, 21, 22 மற்றும் 24ஐ வைப்பு தொகை குறைக்கப்பட்டு பொது ஏலம் கோர உத்தேசிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும் அதற்கான பட்டியல் தொகையினை வழங்கவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெறும் விளம்பர கட்டணத்திற்கான தொகையினை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3653/2018/அ1)**

**பொருள் எண்-03**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 1ல் உள்ள திருமலை திருப்பதி நகரில் உள்ள ஸ்ரீ வாசவி ஸ்வீட்ஸ் பேக்கரி தயாரிப்பு கூடம் மற்றும் பொருட்கள் பாதுகாக்கு இடம் ஆகிய இடங்களில் உள்ள கட்டிடத்திற்கு உணவு பாதுகாப்பு துறையின் மூலம் வழங்கப்பட்ட உத்தரவினை இரத்து செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து, கீழ்க்கண்டவாறு எண்களை இரத்து செய்யப்பட்தை மீண்டும் வழங்க கோரி வழக்கு எண். 3926/2019 மற்றும் 3950/2019ன்படி சென்னை உயர்நீதி மன்றத்தால் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கிற்கு வழக்கு கட்டணம் ரூ. 15000 + 15000 = ரூ. 30,000/— வழங்க கோரி அரசு வழக்கறிஞர் திரு. இ.பாலமுருகன் அவர்களுக்கு வழங்க கோரி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பட்டியல் தொகையினை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். /2018/அ1)**

**பொருள் எண்-04**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான வாகனம் எண். TN 32 U 8542 பழுது நீக்க அங்கீகாரம் பெற்ற பணிமனைகளிடமிருந்து விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. அதன்படி கீழ்க்காணும் விபரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்த நிறுவனத்திற்கு பழுது நீக்க பணி ஆணை வழங்கவும், அதற்கான பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் / குடிநீர் நிதியிலிருந்து செலுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | எஸ்.கே. மோட்டார்ஸ், கள்ளக்குறிச்சி | ஓம் முருகா ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், கள்ளக்குறிச்சி | வேலவன் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், கள்ளக்குறிச்சி |
|---|---|---|---|
| 1. | 147540 | 153950 | 159750 |

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்த எஸ்.கே.மோட்டார்ஸ், கள்ளக்குறிச்சி என்ற நிறுவனத்திற்கு பழுது நீக்க பணி ஆணை வழங்கலாம்.
3. அதற்கான பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் / குடிநீர் நிதியிலிருந்து செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 356/2019/அ4)**

**பொருள் எண்-05**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் அலுவலகத்தில் அலுவலக சம்ள பட்டியல் தயார் செய்ய தனி கணினி தேவைப்படுவதாகவும், அதனை வாங்கி தர கோரியும் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், வேலூர் அவர்களின் கடித எண். 7301/2012/சி1 நாள். 15.02.2019ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. அதனை பார்வையிட்டு கணினி ஒன்றினை வாங்க ஆகும் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், வேலூர் அவர்களின் அலுவலகத்திற்கு கணினி வாங்க ஆகும் செலவினத்தினை நகராட்சி வருவாய் / குடிநீர் நிதியிலிருந்து செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 137/2019/இ1)**

**பொருள் எண்-06**

இந்நகராட்சியின் **2018–19**ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு மதிப்பீடு மற்றும் **2019–20**ம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்-07**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட சேலம் நெடுஞ்சாலையில் கட்டப்பட்ட குளக்கரை கடைகளுக்கு பின்புறம் புதியதாக கட்டப்பட்டுள்ள கடை எண்கள். 14, 15, 16, 17, 18, 21, 22 மற்றும் 24க்கு 12.02.2019 அன்று நடைபெற்ற பொது ஏலம் தொடர்பான விளம்பரத்தினை தினகரன் நாளிதழில் 03.02.2019 அன்று வெளியிட்டடைக்கான பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் / குடிநீர் நிதியிலிருந்து செலுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | விளம்பரம் செய்த நாளிதழின் விபரம் | பட்டியல் விபரம் | தொகை |
|---|---|---|---|
| 1. | தினகரன்<br>KAL Publication, Pondicherry | 3300135677 / 03.02.2019 | ரூ. 8883/– (அனைத்து வரிகள் உட்பட) |

**அலுவலகக் குறிப்பு**

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் / குடிநீர் நிதியிலிருந்து செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. அவசர, அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். )**

**பொருள் எண்-08**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 12 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் அமைந்துள்ள மின் மோட்டார்களை பழுது நீக்கம் செய்யும் பணிக்கு, தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி நாள். 10.09.2018ல் (தீர்மானம் எண். 348/2018 நாள். 30.11.2018) ரூ. 9.90 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரி 0.30% மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள, திரு. N.செங்கோட்டையன், கள்ளக்குறிச்சி என்பவருக்கு பணி உத்தரவு வழங்கி, பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

மேற்காணும் பணியில் பழுது நீக்கம் செய்யும் பணிகள் அனைத்தும் முடிவுற்கு, நிர்வாக அனுமதி பெறப்பட்ட தொகை தற்போது முடிவுறும் தருவாயில் உள்ளது. மேலும், இந்நகரப் பகுதியில் பருவ மழை பொய்த்துவிட்ட காரணத்தினாலும், தற்போது நிலவும் குடிநீர் தட்டுப்பாட்டின் காரணமாகவும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் தினசரி சரியான முறையில் குடிநீர் வரப்பெறவில்லை. இதனால் நகராட்சி பகுதிகளிலுள்ள சிறுமின் விசைப்பம்புகளின் மூலமாக தண்ணீர் விநியோகம் செய்யப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மேலும், தற்போது நிலவும் கடும் வறட்சியின் காரணமாக, ஆழ்துளை கிணற்றின் நீர்மட்டம் நாளுக்குநாள் குறைந்து கொண்டே வருகின்றது. மேலும், மேற்படி சிறுமின் விசைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது நீக்கம் செய்து, குடிநீர் தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்யப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே, குடிநீர் தட்டுப்பாட்டினை தவிர்த்திடும் பொருட்டு, குடிநீர் விநியோக பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு, ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்து, பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட திரு. N.செங்கோட்டையன், கள்ளக்குறிச்சி என்பவர் கொடுத்துள்ள 0.30% மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்திலேயே பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்வதற்கும், அதற்கான உத்தேச செலவின தொகை ரூ. 8,50,000/- (ரூபாய் எட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)–க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளி எடுத்துள்ள ஒப்பந்ததாரர், “திரு. N.செங்கோட்டையன், கள்ளக்குறிச்சி” என்பவரின் சம்மத கடிதம் பெற்று பணியினை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
3. குடிநீர் விநியோக பணியின் அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு, தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று, பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
4. கேட்பு தொகையினை நகராட்சி வருவாய் அல்லது குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 1969 / 2018 / இ1 )**

**பொருள் எண்-09**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு, **நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017-2018-**ம் ஆண்டிற்கு, கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு 05.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரத்தினை தனி அலுவலர் அவர்களின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின்பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1. | Providing High Mast Light at (30 Ft.) CMS Compound Kallakurichi | ரூ. 2,50,000/- | திருவாளர்கள். பாரத் எலக்ட்ரிக்கல் கார்ப்பரேஷன், ஆத்தூர் | 0.34 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திருவாளர்கள். பாரத் எலக்ட்ரிக்கல்ஸ், ஆத்தூர் | 3.04 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 2. | Providing High Mast Light (30 Ft.) at Emapaire Mandaveli Kallakurichi | ரூ. 2,50,000/- | திருவாளர்கள். பாரத் எலக்ட்ரிக்கல் கார்ப்பரேஷன், ஆத்தூர் | 0.34 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திருவாளர்கள். பாரத் எலக்ட்ரிக்கல்ஸ், ஆத்தூர் | 3.04 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |

அலுவலக குறிப்பு

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
3. திட்டப் பணியின் அவரச, அவசியத்தினை கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 1083 / 2018 / இ1 )**

**<u>பொருள் எண்-10</u>**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு, **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017-2018-**ம் ஆண்டிற்கு, கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 05.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரத்தினை தனி அலுவலர் அவர்களின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின்பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1. | கள்ளக்குறிச்சி நகராட்சி கருணாபுரம் புதிய காலனி பகுதிக்கு அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல் | ரூ. 8,00,000/- | திருவாளர்கள். C.J. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 0.18 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திருவாளர்கள். J.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 0.45 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில், 0.18 % மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்கள். C.J. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
3. திட்டப் பணியின் அவரச, அவசியத்தினை கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 665 / 2018 / இ1 )**

**<u>பொருள் எண்-11</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5 அவர்களால் 21.03.2018-ம் தேதிய ஆய்வு கூட்டத்தில் சொத்துவரி கேட்புக்கு ஏற்றவாறு குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, இந்நகராட்சியில் 14219 சொத்துவரி கேட்புகள் உள்ள நிலையில், தற்போது வரை 6411 குடிநீர் இணைப்புகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. மேற்கண்ட பொருள் குறித்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் ஆய்வுக் கூட்ட அறிவுரை நாள். 19.02.2018ன்படி இந்நகராட்சியில் கூடுதலாக 7190 குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட வேண்டுமென குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, தெருவில் உள்ள பகிர்மானக் குழாயிலிருந்து வீடு வரை குழாய் பதித்து 7190 எண்ணிக்கை புதிய குடிநீர் இணைப்புகள் (Internal Plumbing of Water Supply House Service Connections) வழங்கிட, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் உத்தரவு கடிதம் ந.க.எண். 13277/2018/WS1 நாள். 03.07.2018ல் ரூ. 250.00 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் TUFIDCO நிறுவனத்தின் கடிதம் Lr. No. TUFIDCO/UFR1819-40ULBs/AM(M)/2018 நாள். 07.12.2018ல், மேற்காணும் பணியினை மேற்கொள்வதற்கு, UIDSSMT திட்டத்தின் கீழ், ரூ. 245.62 இலட்சத்திற்கு வட்டியில்லா கடனாக வழங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. UIDSSMT திட்டநிதியின் கீழ், வட்டியில்லா கடனாக ரூ. 245.62 இலட்சத்திற்கு அனுமதிக்கப்பட்ட தொகை போக மீதமுள்ள தொகை ரூ. 4.38 இலட்சத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
3. மேற்காணும் பணிக்கு தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் தொழில்நுட்ப அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
4. மேற்காணும் பணியின் அவசர, அவசியத்தை கருத்தில் கொண்டு தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று தொழில்நுட்ப அனுமதி பெற கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டதையும் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 777 / 2018 / இ1 )**

**பொருள் எண்-12**

கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதிகளில் தற்போது வடகிழக்கு பருவ மழை பொய்த்துவிட்ட காரணத்தினால் இந்நகரப் பகுதிகளில் அமைந்துள்ள ஆழ்துளை கிணறுகளில் உள்ள நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. மேலும், இந்நகருக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் குடிநீரின் அளவும் நாளுக்குநாள் குறைந்து கொண்டே வருகிறது. எனவே, பொதுமக்களின் குடிநீர்த் தேவையைக் கருத்தில் கொண்டும், தண்ணீர் தட்டுப்பாடு காரணமாக பொதுமக்கள் சாலை மறியல் போன்ற முயற்சிகளால் இறங்காமல் கண்காணிக்கவும் மாவட்ட ஆட்சித் தலைவர், விழுப்புரம் அவர்களின் அலுவலகத்தில் கண்காணிப்பு குழு அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நடத்தப்பட்ட வாராந்திர ஆய்வுக் கூட்டங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், உள்ளூர் நீராதாரங்களை பெருக்கும் வகையில், இந்நகர பகுதிகளில் உள்ள திறந்தவெளி கிணறுகளை ஆழப்படுத்துதல், தனியார் வாடகை லாரிகள் மூலம் குடிநீர் வழங்க இயலாத பகுதிகளில் குடிநீர் வழங்குதல் மற்றும் இதர குடிநீர் விநியோக பணிகளை போர்கால அடிப்படையில் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டதற்கிணங்க, **குடிநீர் நிதி 2018-2019-**ம் ஆண்டிற்கு, கீழ்க்காணும் விபரப்படி உள்ள பணிகள் மேற்கொள்வதற்கு தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின்பெயர் | மதிப்பீடு தொகை |
|---|---|---|
| 1. | சங்கராபுரம் சாலை தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள திறந்தவெளி கிணற்றினை ஆழப்படுத்துதல் | ரூ. 10,00,000/- |
| 2. | விநாயகா நகர் திறந்தவெளி கிணற்றினை ஆழப்படுத்துதல் | ரூ. 10,00,000/- |
| 3. | ஏமப்பேர் ஏரிக்கரை திறந்தவெளி கிணற்றினை ஆழப்படுத்துதல் | ரூ. 10,00,000/- |
| 4. | அண்ணாநகர் திறந்தவெளி கிணற்றினை ஆழப்படுத்தி, புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி கிணற்றுக்கு இணைப்பு வழங்குதல் | ரூ. 10,00,000/- |
| 5. | கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 01 முதல் 07 வரையுள்ள பகுதிகளில் டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் | ரூ. 4,00,000/- |
| 6. | கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 08 முதல் 14 வரையுள்ள பகுதிகளில் டேங்கள் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் | ரூ. 4,00,000/- |
| 7. | கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 15 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் டேங்கள் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் | ரூ. 4,00,000/- |
| 8. | தானியங்கி குடிநீர் விற்பனை இயந்திரம் (Automatic Water Vending Machine) நிறுவப்படவுள்ள இடங்களுக்கு, ஆழ்துளை கிணறு / திறந்தவெளி கிணற்றிலிருந்து குடிநீர் குழாய்கள் பதித்தல் | ரூ. 4,50,000/- |
| 9. | நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 12 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் அமைந்துள்ள சிறுமின் விசைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகள் பழுது நீக்கம் செய்தல் | ரூ. 9,50,000/- |

மேற்காணும், விவரப்படி உள்ள பணிகளுக்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகைகளுக்கு தனி அலுவலர் அவர்களின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணிகளின் அவசர, அவசியத்தினை கருதி உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால், தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் அனுமதிக்கலாம்.

3. தொகையினை நகராட்சி வருவாய் மற்றும் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 573 / 2019 / இ1 )**

**<u>பொருள் எண்-13</u>**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளிலும் குடிநீர் விநியோகம் செய்யும் சிறுமின் விசைப்பம்புகள், விசைப்பம்புகள் மற்றும் இதர உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கு, ஆணையாளர் அவர்கள் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, விதி-15ன் கீழ் மேற்கொள்வதற்கு 03.01.2019 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், இந்நகரப் பகுதிகளில் உள்ள சிறுமின் விசைப்பம்புகள், விசைப்பம்புகள் மற்றும் அதற்கான இதர உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கு, ரூ. 4,90,000/- இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, விதி-15ன் கீழ் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, பணி முடிக்கப்பட்டு அதற்கான செலவீன பட்டியல் தொகை ரூ. 4,77,568/-ஐ தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் விநியோக பணியின் அவசர, அவசியத்தினை கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, விதி-15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிக்கான செலவீனத் தொகையினையும் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் அல்லது குடிநீர் நிதியிலிருந்து மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 309 / 2019 / இ1 )**

**பொருள் எண்-14**

கள்ளக்குறிச்சி நகராட்சியில், **வருவாய் மற்றும் குடிநீர் நிதி 2018-2019-**ம் ஆண்டிற்கு, கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு 01.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரத்தினை தனி அலுவலர் அவர்களின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின்பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1. | கருணாபுரம் மாரியம்மன் கோவில் தெரு, ராஜா நகர் முகப்பு, பெருமாள் கோவில் தெரு முன்பு ஆகிய பகுதிகளில் வடிகால்கள் மற்றும் சிறுபாலங்கள் அமைத்தல் | ரூ. 9,25,000/- | திரு. N.கணேசன், கள்ளக்குறிச்சி | 0.10 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திருமதி. S.பத்மா, கள்ளக்குறிச்சி | 0.41 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 2. | நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்த தார்சாலைகள் தற்காலிக பழுது நீக்கம் செய்தல் | ரூ. 9,75,000/- | M/s. A.S. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 0.03 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. ஸ்ரீ கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 0.45 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 3. | நகராட்சி தினசரி நாளங்காடியில் சிமெண்ட் தளம் அமைத்தல், பழுது நீக்க பணிகள் மேற்கொள்ளுதல், காந்தி சாலை மற்றும் ஜோதி வள்ளலார் தெரு குடிநீர் விநியோக குழாய் அமைத்தல், கச்சேரி சாலை மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் மோட்டார் அறையில் மின்சார பணிகள் மற்றும் பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ. 6,50,000/- | திரு. P.நடராஜன், கள்ளக்குறிச்சி | 0.12 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. கலை இன்ஜினியரிங், கள்ளக்குறிச்சி | 0.15 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 4. | நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பழுதடைந்த குடிநீர் விநியோக கேட் வால்வுகளுக்கு தொட்டிகள் கட்டுதல் | ரூ. 4,75,000/- | திரு. A.சின்னதுரை, கள்ளக்குறிச்சி | 0.05 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. N.செங்கோட்டையன், கள்ளக்குறிச்சி | 0.47 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 5. | வார்டு எண். 01 முதல் 11 வரையுள்ள பகுதிகளில் பழுதடைந்த சிறுமின் விசைப்பம்பு தொட்டிகள் பராமரிப்பு பணிகள் செய்தல் | ரூ. 5,00,000/- | M/s. கலை இன்ஜினியரிங், கள்ளக்குறிச்சி | 0.06 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. A.சின்னதுரை, கள்ளக்குறிச்சி | 0.34 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 6. | வார்டு எண். 12 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் பழுதடைந்த சிறுமின் விசைப்பம்பு தொட்டிகள் பராமரிப்பு பணிகள் செய்தல் | ரூ. 5,00,000/- | திரு. A.சின்னதுரை, கள்ளக்குறிச்சி | 0.06 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. N.செங்கோட்டையன், கள்ளக்குறிச்சி | 0.34 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 7. | துருகம் சாலை எரிவாயு தகன மேடை பராமரிப்பு மற்றும் LPG எரிவாயு அமைப்பு ஏற்படுத்துதல் | ரூ. 9,90,000/- | M/s. எஸ் எஸ் ஜி இன்ஜினியரிங், சென்னை | 0.41 % மதிப்பீட்டிற்கும் குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | M/s. எம்.ஹெச்.டி. இன்ஜினியரிங், சென்னை | 0.01 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 8. | ஏமப்பேர் ஏரிக்கரை இறக்கத்தில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி குடிநீர் விநியோகம் செய்தல் (வார்டு எண். 15) | ரூ. 3,00,000/- | திரு. N.செங்கோட்டையன், கள்ளக்குறிச்சி | 0.23 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. A.சின்னதுரை, கள்ளக்குறிச்சி | 2.28 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 9. | ஏமப்பேர் ஏரி திறந்தவெளி கிணற்றுக்கு இரும்பு வலை மற்றும் பள்ளிக்கூடத் தெரு முதல் குறுக்குத் தெரு சிமெண்ட் தளம் அமைத்தல் (வார்டு எண். 15) | ரூ. 5,50,000/- | திரு. N.செங்கோட்டையன், கள்ளக்குறிச்சி | 0.03 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. A.சின்னதுரை, கள்ளக்குறிச்சி | 0.31 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 10. | எம்.ஆர்.என். நகர் 2-வது குறுக்குத் தெரு சிமெண்ட் தளம் அமைத்தல் (வார்டு எண். 10) | ரூ. 4,00,000/- | M/s. C.J. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 0.08 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. J.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 0.22 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| 11. | அகரத்தான் கொல்லைத் தெரு கிருஷ்ணன் கோவில் முன்புறம் மழைநீர் வடிகால் கட்டுதல் (வார்டு எண். 20) | ரூ. 2,50,000/- | M/s. J.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 0.22 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திருமதி. S.பத்மா, கள்ளக்குறிச்சி | 0.46 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 12. | தீர்த்தாலு நகர் குறுக்குத் தெரு மழைநீர் வடிகாலுடன் சிமெண்ட் தளம் அமைத்தல் (வார்டு எண். 05) | ரூ. 9,90,000/- | M/s. ஸ்ரீ கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 0.04 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. ஏ.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 0.14 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |

அலுவலக குறிப்பு

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
3. பணிகளின் அவரச, அவசியத்தினை கருதி, தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 3714 / 2018 / இ1 )**

**பொருள் எண்-15**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு **தூய்மை இந்தியா திட்டம் (SBM), திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018-2019**ன் கீழ், Bio Mining முறையில் குப்பைகளை பிரித்தெடுக்கும் பணிகள் மேற்கொள்வதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரத்தினை தமிழ்நாடு மாநில அளவில் ஒரு தமிழ் தினசரி நாளிதழ் *(All Editions in the State)* மற்றும் ஒரு ஆங்கில தினசரி நாளிதழ் *(All Editions in the State)*-ல் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், சென்னை அவர்களின் மூலமாக பிரசுரம் செய்யப்பட்டதற்கான தொகை ரூ. 59,892/-ஐ வழங்கக் கோரி M/s. கிராபிக் ஆர்ட்ஸ் இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்தாரின் பட்டியல் எண். 2974 நாள். 07.09.2018-ல் பட்டியல் பெறப்பட்டுள்ளது. மேற்படி பட்டியல் தொகையினை M/s. கிராபிக் ஆர்ட்ஸ் இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்தாருக்கு வழங்க தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 2220 / 2018 / இ1 )**

**பொருள் எண்-16**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு **தூய்மை இந்தியா திட்டம் (SBM), திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018-2019**ன் கீழ், கள்ளக்குறிச்சி நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு Battery Operated Vehicle சப்ளை செய்யும் பணி மேற்கொள்வதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரத்தினை மாவட்ட அளவில் ஒரு தமிழ் தினசரி நாளிதழ் *(District Editione)*-ல் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், சென்னை அவர்களின் மூலமாக பிரசுரம் செய்யப்பட்டதற்கான தொகை ரூ. 2,835/-ஐ வழங்கக் கோரி M/s. கிராபிக் ஆர்ட்ஸ் இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்தாரின் பட்டியல் எண். 2981 நாள். 11.09.2018-ல் பட்டியல் பெறப்பட்டுள்ளது. மேற்படி பட்டியல் தொகையினை M/s. கிராபிக் ஆர்ட்ஸ் இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்தாருக்கு வழங்க தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 2220 / 2018 / இ1 )**

**பொருள் எண்-17**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளிலும் சேகரமாகும் குப்பகளை பொதுசுகாதாரபிரிவின் மூலம் அள்ளப்பட்டு வருகிறது.மேற்படி குப்பைகளிலிருந்து வரும் துர்நாற்றத்தினை தவிர்க்கும் வகையில் மேற்படி குப்பைகளில் லெமன் கிராஸ் ஆயில் **(lemon gress oil)** வாங்குவதற்கு அதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்)–க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்
2. பொது சுகாதார பிரிவின் அவசர, அவசியத்தினை கருதி, தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று விலைப்புள்ளிகள் பெற்று பணியினை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 086 / 2019 / எச்1 )**

**பொருள் எண்-18**

கள்ளக்குறிச்சி நகராட்சியில், **வருவாய் நிதி 2018-2019-**ம் ஆண்டிற்கு, கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 05.02.2019 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின்பெயர் | விலைப்புள்ளிதாரர் பெயர் | விலைப்புள்ளி விவரம் |
|---|---|---|---|
| 1. | கள்ளக்குறிச்சி நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு தேவையான லெமன் கிராஸ் ஆயில் **(lemon gress oil)**விநியோகம் செய்தல் | திருவாளர்கள். ஸ்ரீ திருமுருகன் டிரேடர்ஸ் நாமக்கல் | ரூ.2800/— (1லிட்டர்) குறைவான விலைப்புள்ளி |
| | | திருவாளர்கள். ஸ்ரீ பிளாஸ்டோ டெக் சென்னை | ரூ.2950/— (1லிட்டர்) குறைவான விலைப்புள்ளி |
| | | திருவாளர்கள். டிரினிட்டி எண்டர்பிரைசஸ் சேலம் | ரூ.3100/— (1லிட்டர்) குறைவான விலைப்புள்ளி |

**அலுவலக குறிப்பு**

1. மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள **"திருவாளர்கள். ஸ்ரீ திருமுருகன் டிரேடர்ஸ் நாமக்கல்"** என்ற நிறுவனத்தாரின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.
2. பொது சுகாதாரப் பணியின் அவசர, அவசியத்தினை கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் அங்கீகரிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 86 / 2019 / எச்1 )**

**பொருள் எண்-19**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான துருகம் சாலை மயானத்தில் அமைக்கப்பட்டுள்ள கழிவறை, தற்போது பழுதடைந்து கழிவு நீர்கள் செல்வதற்கு ஏதுவாக இல்லாமாலும், கழிவறையில் உள்ள டைல்ஸ்கள் மற்றும் இதர பகுதிகள் பழுதடைந்து கழிவறையினை பொதுமக்கள் உபயோகபடுத்துவதற்கு இயலாத சூழ்நிலையில் உள்ளதால், மேற்படி கழிவறையினை மராமத்து பணிகள் உடனடியாக மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் நேரடி தல ஆய்வில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், இந்நகராட்சியின் வருவாய் நிதி 2017-2018 ஆம் ஆண்டின் கீழ், துருகம் சாலை மயானத்தில் அமைக்கப்படவுள்ள நுன்உர மையத்தினை சுற்றி சுற்று சுவர் கட்டுவதற்கு இந்நகராட்சி மன்ற தீர்மான எண். 180/2017 நாள். 15.12.2017ல், ரூ. 9.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரி 24.01.2018ல் பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை எடுத்துள்ள ஒப்பந்ததாரர் மூலமாகவே, கழிவறையினை மராமத்து பணிகள் மேற்கொள்ளவும், மேலும் மதிப்பீட்டு தொகைக்குள்ளேயே பணியினை மேற்கொள்ளவும், சுற்று சுவர் கட்டுவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டில், கழிவறையினை மராமத்து பணிகள் மேற்கொள்ள துணை விலை விகிதங்களை (Suplementary Data) 2017-2018ம் ஆண்டு விலை விவரப்பட்டியலிருந்து மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட பணியின் அவசர, அவசியத்தினை கருதி, தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று ஏற்கனவே சுற்று சுவருக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகையில், மதிப்பீட்டு தொகைக்கு மிகாமல் தொகையினை வழங்கவும் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 3068 / 2017 / இ1 )**

**பொருள் எண்-20**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளிலும் கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு புகை தெளிப்பான் இயந்திரம் தேவைப்படுவதால், இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு கை புகை தெளிப்பான் (LOC Hand Fogg) இயந்திரம் மற்றும் அதற்கு தேவையான கேஸ் சிலிண்டர்கள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 3,00,000/- (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்)—க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

4. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்
5. பொது சுகாதார பிரிவின் அவசர, அவசியத்தினை கருதி, தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று விலைப்புள்ளிகள் பெற்று பணியினை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
6. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். / 2019 / எச்1 )**

**பொருள் எண்-21**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், நகராட்சி அலுவலக வளாகத்தில் புதியதாக கட்டப்பட்ட நுன்உர மையத்தினை சுற்றி, மக்கும் குப்பை / மக்காத குப்பை, குப்பைகளை பிரித்து வழங்குதல், குப்பைகளை இயற்கை உரமாக்குதல் குறித்த விழிப்புணர்வு படங்களை ஓவியத்தின் மூலம் வரைவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்)—க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்
2. திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணியின் அவசர, அவசியத்தினை கருதி, தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று விலைப்புள்ளிகள் பெற்று பணியினை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். / 2019 / இ1 )**

**பொருள் எண்-22**

கள்ளக்குறிச்சி நகராட்சியில், **வருவாய் நிதி 2018-2019-**ம் ஆண்டிற்கு, கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 05.02.2019 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின்பெயர் | விலைப்புள்ளிதாரர் பெயர் | விலைப்புள்ளி விவரம் |
|---|---|---|---|
| 1. | கள்ளக்குறிச்சி நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு தேவையான கை புகை தெளிப்பான் (LOC Hand Fogg) இயந்திரம் மற்றும் கேஸ் சிலிண்டர் விநியோகம் செய்தல் | திருவாளர்கள். ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நாமக்கல் | ரூ.18740/— குறைவான விலைப்புள்ளி |
| | | திருவாளர்கள். ஸ்ரீ நாவலடி அசோசியேட்ஸ், நாமக்கல் | ரூ.19752/— அதிகமான விலைப்புள்ளி |
| | | திருவாளர்கள். ஸ்ரீ அக்ஷயா டிரேடர்ஸ், திருச்சி | ரூ.19450/— அதிகமான விலைப்புள்ளி |

**அலுவலக குறிப்பு**

4. மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள "திருவாளர்கள். ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நாமக்கல்" என்ற நிறுவனத்தாரின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.
5. பொது சுகாதாரப் பணியின் அவசர, அவசியத்தினை கருதி தனி அலுவலர் அவர்களின்

முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் அங்கீகரிக்கலாம்.

6. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். / 2019 / எச்1 )**

## பொருள் எண்-23

கள்ளக்குறிச்சி நகராட்சியில், **வருவாய் நிதி 2018-2019-**ம் ஆண்டிற்கு, கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 05.02.2019 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | வேலையின்பெயர் | விலைப்புள்ளிதாரர் பெயர் | விலைப்புள்ளி விவரம் |
|---|---|---|---|
| 1. | கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள நுன்உர மையத்தில் திடக்கழிவு மேலாண்மை விழிப்புணர்வு குறித்த ஓவியங்கள் வரைதல் | திரு. ஜெயசீலன், கடலூர் | ரூ. 100/- (ஒரு சதுர அடி) குறைவான விலைப்புள்ளி |
| | | திருவாளர்கள். சண்முகம் ஆர்ட்ஸ், பண்ருட்டி | ரூ. 105/- (ஒரு சதுர அடி) அதிகமான விலைப்புள்ளி |
| | | திருவாளர்கள். இளங்கோ ஆர்ட்ஸ், கள்ளக்குறிச்சி | ரூ. 108/- (ஒரு சதுர அடி) அதிகமான விலைப்புள்ளி |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மேற்காணும் விலைப்புள்ளிகளில், ரூ. 100/- (ஒரு சதுர அடி) குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள **"திரு. ஜெயசீலன், கடலூர்"** என்பவரின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.
2. திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர, அவசியத்தினை கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் அங்கீகரிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். / 2019 / இ1 )**

## பொருள் எண்-24

கள்ளக்குறிச்சியினை விழுப்புரம் மாவட்டத்திலிருந்து தனியாக பிரித்து தனி மாவட்டமாக மாண்புமிகு. தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, கள்ளக்குறிச்சியினை தனி மாவட்டமாக தோற்றுவிப்பது தொடர்பாக, அனைத்து கட்சி பிரமுகர்கள் மற்றும் பொது மக்களிடையே கருத்து கேட்பு கூட்டம் 06.02.2019 அன்று கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலத்தில் கூடுதல் தலைமை செயலாளர், கண்காணிப்பு குழு அலுவலர், மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர், துணை ஆட்சியர் மற்றும் இதர துறை அலுவலர்களால் நடத்தப்பட்டது. மேற்படி பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு, பாராளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், அனைத்து துறை அலுவலர்கள், அனைத்து கட்சி பிரமுகர்கள், அனைத்து வியாபாரி சங்கங்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் இந்நகராட்சி அலுவலகத்திற்கு வருகை தந்து கருத்து கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்டனர். மேலும், மேற்படி கருத்து கேட்பு கூட்டத்திற்கு, அருகிலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலிருந்தும் பொது மக்கள் வருகை புரிந்துள்ளனர்.

மேற்படி பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தவர்களுக்கு அமர்வதற்கு நாற்காலிகள், அலுவலக வளாகத்தினை சுற்றிலும் பந்தல்கள், குடிநீர் வசதிகள், மேடை அமைப்புகள் மற்றும் இதர அனைத்து வசதிகளும் நகராட்சி அலுவலகத்தின் மூலமாக ஏற்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர், விழுப்புரம் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. எனவே, பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1,50,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)–க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணியின் அவசர, அவசியத்தினை கருதி, தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று விலைப்புள்ளிகள் பெற்று பணியினை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். / 2019 / இ1 )**

## <u>பொருள் எண்-25</u>

கள்ளக்குறிச்சி நகராட்சிக்குச் சொந்தமான தினசரி நாளங்காடியில் அமைந்துள்ள தற்காலிக கடைகளுக்கு தனியே மின் இணைப்புகள் இல்லாததால் மாலை மற்றும் இரவு நேரங்களில் வியாபாரங்கள் பெரிதளவு பாதிக்கப்படுவதால், மேற்படி தற்காலிக கடைகளுக்கு புதியதாக 18 எண்ணிக்கை மின் இணைப்புகள் வாங்கி வழங்க காமராஜர் தினசரி காய்கறி மார்கெட் வியாபாரிகள் சங்கம், கள்ளக்குறிச்சி சார்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தினசரி நாளங்காடியில் அமைந்துள்ள தற்காலிக கடைகளுக்கு புதியதாக 18 எண்ணிக்கை மின் இணைப்புகள் பெறுவதற்கும், அதற்காகும் உத்தேச செலவின தொகை ரூ. 30,000/- (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்)—க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணியின் அவசர, அவசியத்தினை கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்று விண்ணப்பம் அளித்து, பெறப்படும் பட்டியலின் அடிப்படையில் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலுத்தவும் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். / 2019 / இ1 )**

**தனி அலுவலர்**
**கள்ளக்குறிச்சி நகராட்சி**